අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/12/07/01 — ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. — දිනය / திகதி / Date 2022.09. 12

**சுற்றுநிருப இலக்கம் : 31/2022**

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவேனாதிபதிகள்,
அனைத்து பாடசாலை அதிபர்கள்,

**2022 மற்றும் 2023ம் வருடங்களுக்குரிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சை வினாப்பத்திரங்களுக்காக அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொள்ளல்.**

இலங்கையில், பாடசாலை கல்விச் செயன்முறையை வழமை போன்று நடாத்திச் செல்வதில் உலகளாவிய கொரோணா தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றன நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளன. இதன் விளைவாக மாணவர்களுக்கு ஏற்படும் கற்றல் இழப்புக்களைக் (learning loss) குறைப்பதற்காக பல்வேறு செயலுபாயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், தொலைக் கல்விச் செயன்முறை இதற்காக பரந்தளவில் உபயோகிக்கப்பட்டது.

இருப்பினும், பாடத்திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய பிரச்சனைகளுடன் கூடிய நிலைமைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சை தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன் படி செயற்படுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**1.0 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை**

தரம் 3, 4, 5 வகுப்புக்களுக்குரியதாக இனங்காணப்பட்டுள்ள அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொள்ளல்.

**2.0 க.பொ.த (சாதாரண தர) பரீட்சை**

தரம் 10 மற்றும் 11 வகுப்புக்களுக்குரியதாக இனங்காணப்பட்டுள்ள ஒவ்வொரு பாடங்களுக்குமுரிய அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொள்ளல்.

அதற்கமைய தேசிய கல்வி நிறுவகத்தினால் இது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கங்கள் மீது தங்களது கவனத்தை செலுத்துதல் வேண்டும். அவ் அத்தியாவசிய கற்றல் உள்ளடங்கங்களுக்குரிய பாடத்திட்டங்களை கல்வி அமைச்சின் இணையத்தளமான www.moe.gov.lk/ எனும் முகவரியூடாகவும் தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளமான www.nie.lk/ எனும் முகவரியூடாகவும் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்பதுடன் channel nie youtube அலைவரிசையூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்படி விடயங்களுக்குரிய பரீட்சைகளுக்காக மாணவர்களை தயார்படுத்துவதற்கும் இவ் விடயம் தொடர்பாக செயற்படக் கூடிய ஆசிரியர்களது கவனத்தை செலுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றென். இத் திருத்தங்கள் 2022. மற்றும் 2023 வருடங்களில் நடைபெறும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை போன்றனவிற்கு மாத்திரமே செல்லுபடியாகும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்.என் ரணசிங்ஹ
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :-

1. அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள் - உரிய நடவடிக்கைக்கும் தகவலுக்கும்
2. பரீட்சை ஆணையாளர் நாயகம் - உரிய நடவடிக்கைக்கும் தகவலுக்கும்
3. பணிப்பாளர் நாயகம் (தேசிய கல்வி நிறுவகம்) – உரிய நடவடிக்கைக்கும் தகவலுக்கும்

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister — +94112784832, +94112784825, minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary — +94112784811, +94112785162, secretary.education@moe.gov.lk